பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: *660* **நாள்: *09.11.2026***

பெருநகர மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், தேனாம்பேட்டை மண்டலத்தில் காரணீசுவரர் பக்கோடா சாலையில் உள்ள சுமீத் எல்கோ நிறுவனத்தின் மின்கல வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் பட்டாசுக் கழிவுகள் சேகரிப்பு நடவடிக்கைகளை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இன்று *(09.11.2026)* மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-*125*க்குட்பட்ட காரணீசுவரர் பக்கோடா சாலையில் உள்ள சுமீத் எல்கோ நிறுவனத்தின் மின்கல வாகனங்கள் நிறுத்தும் பகுதியில் பட்டாசுக் கழிவுகள் சேகரிப்பு நடவடிக்கைகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, துணை ஆணையாளர் *(சுகாதாரம்)* திரு.தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பில் பேசும்போது தெரிவித்ததாவது:

பெருநகர சென்னை மாநகராட்சியின் பராமரிப்பில் சுமார் *488* பேருந்து வழித்தடச் சாலைகள் *(Bus Route Roads – BRRs)*, மொத்தம் *418* கி.மீ. நீளத்திலும், *35,978* உட்புறச் சாலைகள் *(Interior Roads – IRRs)*, மொத்தம் *5,653* கி.மீ. நீளத்திலும் உள்ளது.

தீபாவளி பட்டாசுக் கழிவுகளை விரைந்து சேகரித்து அகற்றும் வகையில், வழக்கமாக காலை நேரப் பணியில் *(A-Shift)* ஈடுபடுத்தப்படும் சுமார் *19,275* தூய்மைப்

பணியாளர்களுடன் கூடுதலாக 600 தூய்மைப் பணியாளர்கள் சிறப்புப் பணிக்காக மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், பட்டாசுக் கழிவுகளை அகற்றுவதற்காக டிப்பர் லாரிகள், JCB இயந்திரங்கள், பாப்கேட் (Bobcat) இயந்திரங்கள் உள்ளிட்ட 350 கூடுதல் வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் சிறப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவை தவிர, ஏற்கனவே களப்பணியில் ஈடுபட்டு வரும் சுமார் 5,000 வழக்கமான வாகனங்களும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், பட்டாசுக் கழிவுகளைத் தனியாகச் சேகரித்து பாதுகாப்பாகக் கையாள்வதற்காக தூய்மைப் பணியாளர்களுக்கு 30,000 பிரத்யேக சேகரிப்புப் பைகள் வழங்கப்பட்டுள்ளன.

இன்று (09.11.2026) காலை 11.00 மணி நிலவரப்படி, சென்னை மாநகரம் முழுவதும் சுமார் 200 மெட்ரிக் டன் பட்டாசுக் கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. தீபாவளி பண்டிகைக் காலத்தில் மொத்தம் சுமார் 600 மெட்ரிக் டன் பட்டாசுக் கழிவுகள் உருவாகும் என மாநகராட்சி எதிர்பார்க்கிறது.

மேலும், மழையின் காரணமாக பட்டாசுக் கழிவுகள் சாலைகளில் ஒட்டிக்கொண்டு இருப்பதால், அவற்றை அகற்றுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்கள் தொடர்ந்து இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு, சாலைகள் மற்றும் பொது இடங்களில் தேங்கியுள்ள பட்டாசுக் கழிவுகளை விரைந்து அகற்றுவதற்கான தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீபாவளி கொண்டாட்டத்தின்போது, 08.11.2026 அன்று இரவு பட்டாசுகள் வெடிக்கப்பட்டதன் காரணமாக சென்னையில் காற்றின் தரம் கணிசமாகப் பாதிக்கப்பட்டது. குறிப்பாக, இரவு சுமார் 10.00 மணியளவில் காற்று மாசுபாட்டின் அளவு அதிகரித்தது. 09.11.2026 இன்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) கண்காணிப்பு நிலையங்களில் பதிவான காற்றுத் தரக் குறியீடு (AQI) விவரங்களின்படி, மணலியில் 277, அரும்பாக்கத்தில் 264, கொடுங்கையூரில் 220

மற்றும் வேளச்சேரியில் *202* எனப் பதிவாகியுள்ளது. இதன் மூலம் மாநகரின் பல்வேறு பகுதிகளில் காற்றின் தரம் மோசமான நிலையில் இருந்தது தெரிய வருகிறது. இருப்பினும், தற்போது காற்றின் தரம் படிப்படியாக மேம்பட்டு இயல்பு நிலையை நோக்கி திரும்பி வருகிறது.

பட்டாசுக் கழிவுகளைத் தரம் பிரித்து அறிவியல் பூர்வமாக அகற்றுதல்

சேகரிக்கப்படும் பட்டாசுக் கழிவுகள் கீழ்க்கண்ட இரண்டு வகைகளாகத் தரம் பிரிக்கப்பட்டு அகற்றப்படும்.

1. **வெடிக்காத பட்டாசுக் கழிவுகள்** ***(Unburnt Firecracker Waste)****:*

வெடிக்காத பட்டாசுகள் தனியாகச் சேகரிக்கப்பட்டு, பாதுகாப்பான மற்றும் அறிவியல் பூர்வமான முறையில் சுத்திகரித்து அகற்றுவதற்காக கும்மிடிப்பூண்டியில் உள்ள பிரத்யேக செயலாக்க மையத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

***2.* வெடிக்கப்பட்ட பட்டாசுக் கழிவுகள் *(Burnt Firecracker Waste)*:**

வெடிக்கப்பட்ட பட்டாசுகளிலிருந்து உருவாகும் காகிதங்கள், அட்டைப் பெட்டிகள் மற்றும் இரசாயனக் கலவைகள் இல்லாத இதர எரியக்கூடிய கழிவுகள் தனியாகச் சேகரிக்கப்பட்டு, கொடுங்கையூரில் *(KDG)* அமைந்துள்ள *50* மெட்ரிக் டன் திறன் கொண்ட எரியூட்டும் நிலையத்திற்கு *(Incinerator Facility)* எடுத்துச் செல்லப்பட்டு அறிவியல் பூர்வமாக அகற்றப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியானது தீபாவளி பட்டாசுக் கழிவுகளை உரிய நேரத்தில் சேகரித்தல், தரம் பிரித்தல், போக்குவரத்து செய்தல் மற்றும் அறிவியல் பூர்வமாக அகற்றுதல் ஆகிய பணிகளை முறையாக மேற்கொள்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

மேலும், பொதுமக்கள் பட்டாசுக் கழிவுகளைத் தனியாகப் பிரித்து, தங்களது பகுதிகளுக்கு வரும் மாநகராட்சித் தூய்மைப் பணியாளர்களிடம் பிரத்யேகப் பைகளில் ஒப்படைக்குமாறும், வழக்கமான வீட்டு உபயோகக் குப்பைகளுடன் கலக்காமலும், சாலைகள் மற்றும் பொது இடங்களில் கொட்டாமலும் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பொதுமக்களின் முழு ஒத்துழைப்புடன் தூய்மையான, பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சென்னையை உருவாக்குவோம் என்று தெரிவித்தார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.